**OS.NO.28/2021 DW-1**

**நாள்** : 10.06.2026

பெயர் : இமெல்டா சுகந்தி

க/பெ : ராபர்ட்

<u>**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் அவர்களையும், 2 முதல் 4 பிரதிவாதிகளையும் காலம் சென்ற இருதயராஜ் என்பவரின் வாரிசுகள் என்று அறிவிக்ககோரி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், என் சகோதிகள் இருவரும் சேர்ந்து இவ்வழக்கின் வாதிகளுக்கு எதிராக காலம் சென்ற இருதயராஜ் என்பவரின் வாரிசுகளாக எங்களை மட்டும் அறிவிக்க கோரி அசல் வழக்கு எண்.31/2021 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் ஒன்றாம் வாதி வா.சா.1 ஆக சாட்சி அளித்துள்ளார் என்றால் சரிதான். வாதிகளின் தரப்பில் இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து தனக்கு எவ்விதமான ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.2 குடும்ப அட்டை நகல் எனது தகப்பனார் இருதயராஜனுடையது தான் என்றால் சரிதான். அதில் முகவரி 5/15, சுந்தர சாலை, சிப்காட் என்று உள்ளது என்றால் சரிதான். குடும்ப உறுப்பினர்கள் என்று ஒன்றாம் பிரதிவாதி ப்ளோரா @ அரசி மற்றும் இரண்டாம் வாதி ஜெயந்தி பெயர் உள்ளது என்றால் சரிதான்.

நான் எனது பதில் உரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் எனது தாயார் மங்கையகரசி எனது தகப்பனாரின் முதல் மனைவி என்றும், ப்ளோரா @ அரசி இரண்டாம் மனைவி என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால்

சரியல்ல. எனது பிராமாண வாக்குமூலத்தின் 5வது பத்தியில் எனது தாயார் முதல் மனைவி என்றும் அந்த திருமணம் நிலுவையில் இருக்கும் போது ப்ளோராவுடன் நடந்த இரண்டாம் திருமணம் செல்லாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

ப்ளோரா மூலமாக பிறந்தவர்கள் தான் இவ்வழக்கின் வாதிகளான ப்ரசில்லா ப்ரீத்தி மற்றும் ஜெயந்தி என்றால் சரிதான். எனது நிறுபன வாக்குமூலத்தில் இவர்களின் தகப்பனார் யார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் என் தகப்பனார் இருதயராஜ்க்கும், ப்ளோரா @ அரசிக்கும் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்பதால் தான் தாசில்தார் அலுவலகத்தில் நீதிமன்றத்தை நாட அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். ப்ளோரா @ அரசியை எனது அப்பா வீட்டு வேலைக்காக அழைத்து வந்தார் என்று நான் கூறுவது தவறாகும் என்றால் சரியல்ல.

ப்ளோரா @ அரசியை எனது தகப்பனாருக்கு இரண்டாம் மனைவி அல்ல என்றும், வீட்டு வேலைக்காக வந்திருந்ததாக நான் கூறுவது உண்மையாக இருந்தால் தாசில்தாரின் ஆணைக்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு தான் சென்றுயிருப்போம் என்றால் சரியல்ல. வாதிகள் எனது தகப்பனாரின் வாரிசு இல்லை என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை எங்கள் குடும்பத்தில் சுமூகமாகதான் இருந்து வந்தோம் என்றாலும், அவரின் இறப்புக்கு பின்னிட்டு அவரின் அசையும், அசையா சொத்துக்களை நாங்கள் மட்டுமே அடைய வேண்டும் என்ற தவறான நோக்கத்தின் அடிப்படையில் அசல் வழக்கு எண்.31/2021 வழக்கை தாக்கல் செய்தும், இந்த வழக்கில் எதிர் வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிகளின் கோரிக்கையின் படி இவ்வழக்கை அனுமதித்தும், நாங்கள் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது அப்பாவுக்கு

நாங்கள் மட்டுமே வாரிசு என்று கூறியிருப்பது தவறாகும் என்றால் அது சரியல்ல.

**பிரதிவாதிகள் 5 முதல் 7 க்கான குறுக்கு விசாரணை**

தாசில்தார் நீதிமன்றம் அணுகி வாரிசு சான்று பெறவேண்டும் என்று கூறியதால் தான் நீதிமன்றம் நாடி வந்தோம் என்றால் சரிதான். ஆகவே நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பின் படி தாசில்தார் ஆணையை நடைமுறைபடுத்துவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2026.06.10 17:07:01 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.